**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**EP. No. 61/2023**

| | | | |
|---|---|---|---|
| | | **DEPOSITION OF WITNESS** | **PW.1** |
| NAME | ராமமூர்த்தி | TALUK | |
| HUSBAND NAME | | RELIGION | |
| AGE | | CASTE | |
| VILLAGE | | OCCUPATION | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 14.07.2025.

**முதலாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. முதலாம் எதிர்மனுதாரர் சொந்தமாக டீ கடை நடத்தி தினமும் 1000 ரூபாய் வருமானம் பெறுகிறார் என பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நிலையில் ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, நான் நேரடியாக பார்த்துள்ளேன். அவர் உண்மையில் எந்த தொழிலும் செய்யவில்லை என்றாலும் அவருக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல.

2. முதலாம் எதிர்மனுதாரர் வழக்கு நிலுவையில் இருந்தபோதே நொடிப்பு நிலை அடைந்துவிட்டதாக எனக்கு அறிவிப்பு அனுப்பி அது பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில், நொடிப்பு நிலை அடைந்தவர் மீது நான் நிறைவேற்று மனு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல, அவர் நல்ல வருமானம் பெற்று வருகிறார்.

3. முதலாவது எதிர்மனுதாரருக்கு எதிராக கடன் நிவாரண சட்டம் பொருந்தும் என்றாலும் அதனால் இந்த நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் நேரடியாக முதலாம் எதிர்மனுதாரரை பார்த்ததாக சொல்லியுள்ள நிலையில் கடைசியாக எங்கு வைத்து எப்போது பார்த்தேன் என்றால் அவரது டீ கடையில் வைத்து 40 நாட்களுக்கு முன்பு பார்த்தேன்.

4. முதலாம் எதிர்மனுதாரர் பேரலைஸ் அடைந்து ஒன்றரை வருடங்களாக சிகிச்சையில் உள்ளார் என்றாலும் வழக்கிற்காக அவரை டீ கடையில் பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH — Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.